**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 70/2021
Prosecution side witness for P.W.17

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.முருகன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.03.2026**

others present. A5 absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி மின்பகிமான வட்டம், வண்ணாரபேட்டை பிரிவில் இளநிலை மின்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த நான் தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி மின்பகிமான கழகத்தில் 2019 ஆம் ஆண்டு இளநிலை மின்பொறியாளராக பணிபுரிந்து வந்தேன். 29.04.2019 ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் ஆழ்வார்திருநகரி மின்விநியோகத்திற்குட்பட்ட ஆதிநாதபுரம் பகிர்மானத்தில் உள்ள நவலெட்சுமிபுரம் பகுதியில் மின்தடை எதுவும் ஏற்பட்டிருந்ததா என்று ஆழ்வார்திருநகரி காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் வேண்டுகோள் கடிதத்துடன் அறிக்கை கேட்டிருந்தார். 29.04.2019 ஆம் தேதி எங்கள் அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட இடத்திற்கு இரவு நேரமான 7.30 மணியிலிருந்து காலை வரை மின்தடை இருந்ததற்கான தொலைபேசி அழைப்போ, புகாரோ பதிவாகவில்லை. மேலும் எங்கள்

அலுவலக ஆவணங்களை பார்த்தும், கணினியில் பரிசோதித்து 29.04.2019 அன்று மாலை 7.30 மணியளவில் ஆழ்வார்திருநகரி மின்விநியோகத்திற்குட்பட்ட ஆதிநாதபுரம் பகிர்மானத்தில் உள்ள நவலெட்சுமிபுரம் பகுதியில் மின்தடை எதுவும் ஏற்படவில்லை என நான் சான்று வழங்கினேன். அதற்கான சான்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–11** ஆகும். இது சம்மந்தமாக ஆழ்வார்திருநகரி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

ஒவ்வொரு கிராமத்திற்கும் கம்பியாளர் நியமிக்கப்பட்டிருப்பார்கள் என்றால் சரிதான். அவர்கள்தான் மின்சாரம் சம்மந்தப்பட்ட பழுதுகளை பார்ப்பார்கள் என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். கம்பியாளரிடம் கேட்டு விசாரணை செய்தபிறகுதான் அதன் அடிப்படையில் இந்த சான்று வழங்கினேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை ஆய்வாளரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வழக்கு சம்பவ இடத்தை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். என்ன என்ன மின்கம்பங்களில் எல்லாம் மின்விளக்குகள் நல்ல நிலையில் இருந்ததா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>